**களுத்துறை மாவட்டத்தின் 20 கமநல சேவைக் குழுக்கள்- 2023**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 களுத்துறை மாவட்டத்தின் 20 கமநல சேவைக் குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** களுத்துறை மாவட்டத்தின் 20 கமநல சேவைக் குழுக்களுக்குரியதாக விநியோகிக்கப்பட்ட 20 கணக்காய்வு அறிக்கைகளில் 03 குழுக்களுக்கு மறுப்பு அபிப்பிராயமும், 17 குழுக்களுக்கு முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்ததுடன் மறுப்பு அபிப்பிராயம் மற்றும் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான காரணங்களாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களில் உள்ளடங்கியுள்ள கணக்கீட்டு கொள்கைகளுடன் இணங்காமை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்ட இலக்கம் 99 முதல் 139 வரையான பிரிவுகளின் பிரகாரம் 20 குழுக்கள் கமநல வங்கியினால் நிதிக்கூற்றுக்களுடன் நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்படாது இருந்ததுடன் 20 கமநல சேவைக் குழுக்களின் நிதிக்கூற்றுக்களுடன் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சரியாக தயாரித்து சமர்ப்பிக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இற்கு இணங்க பிரதான காசு பாய்ச்சல் இனங்கண்டு வகைப்படுத்தப்படாமல் கமநல வங்கி பிரிவின் காசுப் பாய்ச்சல் கூற்று நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சுரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பயன் படுத்தப்பட்ட சகல கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக்கூற்றுத் தொகுதியில் குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் 10 குழுக்கள் மற்றும் 10 கமநல வங்கிகள் நிதிக்கூற்றுக்களில் சகல கணக்கீட்டு கொள்கைகளையும் குறிப்பிட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது சரியாக குறிப்பிடப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கும் போது கிரயம், திரண்ட பெறுமானத் தேய்வு, தேறிய பெறுமதி தனித்தனியாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் 02 குழுக்கள் அந்த வகையில் காண்பித்திருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது சரியாக குறிப்பிடப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும் |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல வங்கிக்கு கணனி துணைப் பாகங்களைக் கொள்வனவு செய்வதற்காக 13 குழுக்களினால் கூட்டு மொத்தமாக ரூபா 2,524,665 தொகை 2023 ஆம் ஆண்டின் போது செலுதப்பட்டிருந்ததுடன் அந்த கொடுப்பனவுப் பெறுமதி திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையால் அப்பெறுமதியால் திரண்ட நிதியம் மற்றும் சொத்துக் கணக்கின் மீதி குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மாவட்ட அலுவலகங்களின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படுத்தப்பட்டுள்ளது. | சொத்துகள் கணக்கு மற்றும் திரண்ட நிதியம் கணக்கு என்பவற்றை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 17 கமநல சேவைக் குழுக்களின் கமநல வங்கிகளில் ஒழுங்கமைக்கும் செயற்திட்டம் 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ரூபா 85,000 ஆன அட்டுறு செலவினம் 2023 திசெம்பர் 31 | 2024 ஆம் ஆண்டின் போது கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அட்டுறு செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய செலவினம் ஒன்றாக கணக்கீடு செய்யப்படாததுடன் 2022 ஆம் ஆண்டுக்குரிய 2023 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 85,000 செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | பண்டாரகம கமநல சேவை குழுவிற்காக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 1,247,688 ஆன அலுவலக உபகரணங்கள் மற்றும் ரூபா 43,092 ஆன விவசாய உபகரணங்கள் பெறுமானத் தேய்வு செய்யும் போது ஒவ்வொரு சொத்து விடயங்களும் கொள்வனவு செய்யப்பட்ட திகதியை அடிப்படையாகக் கொள்ளாமல் பெறுமானத் தேய்வு பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | கோவைகள் மூலம் அல்லது ஏனைய முறையில் உறுதிப்படுத்தப்படாத 13 குழுக்களில் கூட்டுமொத்தமாக ரூபா 5,593,058 ஆன பொறுப்புக்கள் மற்றும் 15 குழுக்களில் பௌதீக ரீதியில் காணப்படாத கூட்டுமொத்தமான ரூபா 3,967,964 ஆன சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட்டிருந்தது. | போலியான சொத்துக்கள் மற்றும் போலியான பொறுப்புக்களை அகற்றி கணக்கீடு செய்யப்படும். | முறையான பிரகாரம் நடவடிக்கை எடுத்து மீதி உறுதிப்படுத்திய பின் நிதிக் கூற்றுக்கள் சரி செய்யப்படல் வேண்டும். |
| (உ) | 06 குழுக்களுக்கு உரிய கூட்டுமொத்தமான ரூபா 177,765 காலாவதியாகிய விதைகள், கன்றுகள் மற்றும் பசளை இருப்புக்கள் மற்றும் 02 குழுக்களில் கூட்டுமொத்தமாக ரூபா 43,996 ஆன பௌதீக ரீதியில் உறுதிப்படுத்தி காணப்படாத இருப்பும் சுழற்சி இருப்பாக செயற்பாட்டில் உள்ள இருப்பாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | காலாவதியான இருப்புக்கள் மற்றும் பௌதீக ரீதியில் காணப்படாத இருப்புக்கள் தொடர்பாக முறையான பிரகாரம் நடவடிக்கை எடுத்து இருப்பு மீதி சரி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2023 ஆம் ஆண்டில் ஏக்கர் வரி வருமானம் கணக்கீடு செய்யும் போது 02 குழுக்களில் கூட்டுமொத்தமாக ரூபா 67,302 குறைத்தும் மேலும் 11 குழுக்களில் கூட்டுமொத்தமாக ரூபா 287,988 அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கண்டறிந்து சரி செய்யப்படும். | ஆண்டிற்குரிய சரியான ஏக்கர் வரி வருமானம் இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 11 குழுக்களில் 26 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் நேரொத்த அறிக்கைகளுக்கு இடையிலான மீதிகளில் கூட்டு மொத்தமான ரூபா 5,511,654 இணக்கமின்மைகள் காணப்பட்டது. | 2024 இன் கணக்கு அறிக்கைகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான பிரகாரம் நடவடிக்கை எடுத்து கணக்குகள் அல்லது நேரொத்த அறிக்கைகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.3.4 அதிகாரப் பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் தயாரித்தல் மற்றும் அங்கீகாரம் பெற்றுக் கொண்ட பின்னர் 03 கமநல சேவைகள் குழுக்களால் 103 நாட்குறிப்புப் பதிவுகள் மற்றும் கமநல வங்கிக்கு நாட்குறிப்புப் பதிவுகள் இட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் தயாரித்து அங்கீகாரம் பெற்று கணக்கீடு செய்யப்படும். | துணை ஆவணங்களுடன் நாட்குறிப்பு பதிவுகள் தயாரித்து நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் நாட்குறிப்பில் பதிவுகள் இடுதல் வேண்டும். |

**1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 15 கமநல சேவைகள் குழுக்களில் கூட்டுப் பெறுமதி ரூபா 28,841,480 இற்குரிய பகுதி ஆவணங்கள், வைப்பு ஆவணங்கள், காசோலை பதிவேடு, வங்கி இணக்கக் கூற்று அறிக்கை, சிறிய குழுக்களின் வைப்புப் பதிவேடு, நிலையான சொத்துப் பதிவேடு கடன் மீதி பதிவேடு மற்றம் கடன் உறுதிப்படுத்தும் சான்றிதழ் போன்ற எழுத்து மூல சான்றுகள் | உரிய பட்டோலைகள் மற்றும் எழுத்து மூலம் உறுதிப்படுத்தும் சான்றுகள் 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் சமரப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படம். | பதிலின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் உரிய எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படாமையின் காரணமாக அந்த கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்தி கரமாக சான்றுதிப்படுத்த முடியாதிருந்தது. | | |
| (ஆ) | இத்தேபான கமநல சேவைக் குழுவின் நிதி செயலாற்றல் கூற்றில் வருமானமாக மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் காசுப் பெறுவனவாக குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 78,331 ஆன வட்டி வருமான மீதியை உறுதிப்படுத்துவதற்கு எழுத்துமூல சான்றுகள் காணப்படவில்லை. | கண்டறிந்து சரி செய்யப்படும். | கணக்காய்வு சான்றுகளை இனங்கண்டு 2024 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கம் போது உரிய பிரகாரம் சரி செய்தல் வேண்டும். |

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்கள் உடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| அ) 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம் | | | |
| (i) 30 ஆம் பிரிவு | 03 குழுக்களில் பயிர் செய்யக் கூடிய 804 ஏக்கர் 79 றூட் 12 பேர்ச் பரப்பளவுடைய வயலின் அளவு தரிசு நிலமாகக் காணப்பட்டது. | ஏற்றுக் கொள்கின்றோம். | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 56 ஆம் பிரிவு | 20 கமநல சேவைக் குழுக்களின் மூலம் சட்டரீதியாக அறவிடப்பட வேண்டிய சகல ஏக்கர் வரித் தொகை குறித்துரைத்த பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) 75 ஆம் பிரிவு | 02 கமநல சேவைகள் குழுக்கள் அதிகாரப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற 15,336 விவசாய குடும்பங்கள் இருந்த போதும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த குடும்பங்களுக்கு விவசாயிகள் அடையாள அட்டை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய இலக்கம் 04/2012 என்ற கமநல அபிவிருத்தி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 5.6(1) ஆம் பந்தி | கமநல வங்கிக்கு உரிய சகல கணக்குகளும் கமநல சேவை குழுக்களின் வருடாந்த இறுதிக் கணக்ககளில் உள்ளடக்கி ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் 20 கமநல சேவைக் குழுக்களும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். | ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 110 | புளத்சிங்கள கமநல சேவைக் குழுவினால் இழப்பு மற்றும் நட்டம் தொடர்பான பதிவேடு ஒன்று பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | ஏற்றுக் கொள்கின்றோம். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 141(2), 386(3) | புலத் சிங்கள கமநல சேவைக் குழுவின் மூலம் கூட்டுமொத்தமாக ரூபா 3,218,381 காசோலை அடியிதழ்கள் 17 இற்காக காசோலை யையொப்பம் இட்ட உத்தியோகத்தரால் குறுங் கையொப்பம் மற்றும் உறுதிச்சீட்டு இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். | -மேற்படி- |
| (iii) | நிதிப் பிரமணம் 215(1) | எந்த ஒரு வழங்கலுக்கும் உரிய சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்படாமல் முன்னரே கொடுப்பனவு மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும் 14 குழுக்களின் பயன்பாட்டிற்காக கணனி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,653,508 தொகை 2023 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2024 | ஏற்றுக் கொள்கின்றோம். | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | யூலை மாதம் வரையிலும் உரிய சகல பொருட்களும் குழுவிற்கு கிடைத்திருக்கவில்லை. | | |
| (iv) | நிதிப் பிரமாணம் 237(இ) | கூட்டுமொத்தமாக ரூபா 2,679,736 ஆன 39 கொள்வனவுகளுக்காக 03 குழுக்களால் இருப்புப் புத்தகம் / நுகர்வுப் பதிவேடு பொருட் பதிவேடுகளுக்கு தொடர்பினை காண்பித்தல் மற்றும் இருப்பு பௌதீக ரீதியில் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். | -மேற்படி- |
| (v) | நிதிப் பிரமாணம் 245(1) | பதுரலிய கமநல சேவைக் குழுவினால் கூட்டுப் பெறுமதி ரூபா 14,495,954 ஆன 12 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை அங்கீகரித்தல் அல்லது உறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் 13 கமநல சேவைக் குழுக்களில் கூட்டுமொத்தமாக ரூபா 7,343,884 மிகையும், 07 குழுக்களால் கூட்டுமொத்தமாக ரூபா 3,453,094 பற்றாக்குறையும் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை மற்றும் பற்றாக்குறை முறையே ரூபா 4,375,045 மற்றும் ரூபா 1,784,442 ஆகும். மீளாய்வாண்டின் நிதி விளைவுகளின் பிரகாரம் 19 கமநல வங்கிகளில் கூட்டுமொத்தமாக ரூபா 3,995,924 மிகையும், ஒரு கமநல வங்கியில் ரூபா 274,769 பற்றாக்குறையும் ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை மற்றும் பற்றாக்குறை முறையே ரூபா 3,047,933 மற்றும் ரூபா 143,137 ஆகும்.

### 2.2 நிதி விளைவுகளின் பகுப்பாய்வு

(அ) 06 குழுக்களின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 6,337,506 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த அந்த 06 குழுக்களின் கடந்த ஆண்டில் மிகையின் கூட்டுப் பெறுமதி ரூபா 2,384,881 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 3,952,625 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு ஏக்கர் வரி வருமானம் அதிகரித்தமை, நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்தமை, விற்பசைன்சாலைகளின் வருமானம் அதிகரித்தமை என்பன பிரதான காரணமாக இருந்தது.

(ஆ) 02 குழுக்களின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 238,482 மிகையாக இருந்த போதும் அதற்கு எதிராக கடந்த ஆண்டின் பற்றாக்குறையின் கூட்டுப் பெறுமதி ரூபா 149,140 ஆனமையால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 387,622 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு ஏக்கர் வரி வருமானம் அதிகரித்தமை, பசளை வருமானம் அதிகரித்தமை, பழுதுபார்த்தல்

செலவினம் குறைவடைந்தமை, கட்டண வருமானம் அதிகரித்தமை என்பன பிரதான காரணமாக இருந்தது.

(இ) 04 குழுக்களின் மீளாவாண்டின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 440,303 பற்றக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகையின் கூட்டுப் பெறுமதி ரூபா 493,019 ஆனமையால் நிதிவிளைவுகளில் ரூபா 933,322 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மண் விற்பனை வருமானம் குறைவடைந்தமை, டெக்டர் பழுதுபார்த்தல் செலவினம் அதிகரித்தமை, காகிதாதிகள் செலவினம் அதிகரித்தமை என்பன பிரதான காரணமாக இருந்தது.

(ஈ) 03 குழுக்களின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 3,012,791 பெறுமதி பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறையின் கூட்டுப் பெறுமதி 1,635,302 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,377,189 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏக்கர் வரி வருமானம் குறைவடைந்தமை, விற்பனை வருமானம் குறைவடைந்தமை, பசளை வருமானம் குறைவடைந்தமை மற்றும் செலவினங்கள் அதிகரித்தமை என்பன காரணமாக இருந்தது.

(உ) 05 குழுக்களின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 767,896 மிகையாகக் காண்பிக்கப்பட்டதுடன் அதற்கு நேரொத்த அந்த 05 செயற்குழுக்களினதும் கடந்த ஆண்டிள் மிகையின் கூட்டுப்பெறுமதி ரூபா 1,497,145 ஆனமையால் நிதி விளைவுகள் ரூபா 729,249 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு விற்பனை வருமானம் குறைவடைந்தமையும், பசளை வருமானம் குறைவடைந்தமையும், செலவினங்கள் அதிகரித்தமையும் காரணமாக இருந்தது.

(ஊ) 19 கமநல வங்கிகளில் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டு மொத்தம் ரூபா 3,995,924 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகையின் கூட்டுப் பெறுமதி ரூபா 3,047,933 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 947,991 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அதற்காக தொடர்ச்சியாக விவசாயிகளுக்கு கடன் வழங்குதல் மற்றும் செலவினங்கள் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது. எனினும் 2023 ஆம் ஆண்டின் போது பாகொட கமநல வங்கி மாத்திரம் ரூபா 274,769 பற்றாக்குறை ஒன்றைப் பெற்றிருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 143,137 ஆனமையால் நிதி விளைவுகள் ரூபா 417,906 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. அதற்காக கமநல வங்கியின் வருமானம் குறைவடைந்தமை மற்றும் செலவினம் அதிகரித்தமை என்பன பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 20 கமநல சேவைக் குழுக்களில் 2023 ஆம் ஆண்டின் ‘W’ தொகுதியில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்கின்ற வயல்களில் 21,119 ஹெக்ரேயரில் நெல் பயிரிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 15,679 ஹெக்ரேயரில் மாத்திரம் நெல் பயிரிடப்பட்டமையால் 5,440 ஹெக்ரேயர் இன் இலக்கினை | எதிர்காலத்தில் நெற் பயிர்ச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயிர்ச் செய்கை இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு கமநல சேவை குழுவில் வைப்பு கணக்கு சிறிய குழுவின் வைப்பு, மகளிர் விவசாய அமைப்பு வைப்புக்கள் மற்றும் முன் சிறுவர் வைப்புக் கணக்கு 3576 இல் 2182 கணக்குகள் அதாவது 61 சதவீதம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படாமல் செயலிழந்த கணக்கிற்கு உட்பட்டிருந்தது. | கண்டறிந்து செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 2023 ஆம் ஆண்டில் 16 கமநல வங்கிகளில் சித்தமு மகளிர் நிகழ்ச்சித் திட்டம் 363 அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அதனிடையே 174 நிகழ்ச்சித் திட்டங்களின் செயல் முன்னேற்றம் திருப்தி கரமான நிலையில் காணப்படவில்லை. | கண்டறிந்து 2024 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | ஆண்டின் போது 20 கமநல சேவைக் குழுக்களில் தரிசு வயல் 2268 ஏக்கரில் நெல் பயிரிடுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் 1331 ஏக்கர் வெற்று வயல்கள் அறுவடைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தரிசு வயல்களில் இலக்கு 2024 ஆம் ஆண்டின் போது அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தரிசு வயல்களில் நெல் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 11 குழுக்கள் நடாத்திச் செல்லப்படுகின்ற காணிகளின் உரித்து பிரதேச செயலகங்களில் இருந்து கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | காணிகளைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இங்கிரிய குழுவின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக கிடைக்கப் பெற்ற ரூபா 209,420 தொகை ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் விளைவற்று நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் போது முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது முறையான அங்கீகாரத்தைப் பெற்று நிலையான வைப்பில் முதலீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். |
| (ஆ) | பாணந்துறைக் குழுவின் ஹெல இயற்கை உணவக கட்டிடம் மற்றும் வெளிநபர் விற்பனை சாலைகள் வெளிதரப்பினருக்கு வாடகை அடிப்படையில் வழங்கும் போது பெறப்பட்ட கூட்டுப் பெறுமதி ரூபா 106,500 முற்பணத் தொகை குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்தப்படாமல் வங்கி நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | நிலையான வைப்பு கணக்கு ஒன்றில் வைப்பில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறைக் கணக்கில் காணப்படுகின்ற இந்தப் பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பெலவத்த செயற்குழுவிற்கு உரிய 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 1,682,067 ஆன நடைமுறைக் கணக்கின் மீதி வட்டி வருமானம் ஒன்றைப் பெறும் வகையில் முதலீடு செய்வற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்று முதலீடு செய்யப்படும். | நடைமுறைக் கணக்கில் காணப்படுகின்ற இந்த நிதியினை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பண்டாரகம குழுவிற்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற 02 நடைமுறைக் கணக்குக் மற்றும் சேமிப்புக் கணக்கு என்பன 02 வருடங்கள் முதல் முன் கொண்டுவரப்படுகின்ற மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுப் பெறுமதி ரூபா 1,315,229 மீதி ஒன்று காணப்பட்டதுடன் அந்த பணத்தை ஆகக் கூடிய வட்டி விகிதத்தின் கீழ் நிலையான வைப்பு ஒன்றில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | இந்த பணத்தை அதிக நலன்வாய்ந்த முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | பதுரலிய குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுப்பெறுமதி ரூபா 139,316 தொகையான 02 வங்கி சேமிப்புக் கணக்கின் மீதியை அதிக வட்டி வீதத்தின் கீழ் அருகிச் செல்லும் வட்டி விகிதத்திற்கு உரித்தாகின்ற நிலையான வைப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்படாமல் சேமிப்புக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | இந்த பணத்தை அதிக நலன்வாய்ந்த முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மில்லனிய கமநல சேவைக் குழுவில் கூட்டுப் பெறுமதி ரூபா 1,875,166 ஆன பல்வேறு பணிகளுக்காக குழுவில் வைப்புச் செய்யப்பட்டு மீளச் செலுத்த வேண்டிய பிணை மற்றும் கட்டணங்கள் உரிய வைப்பாளர்களுக்கு வழங்க வேண்டிய சந்தர்ப்பத்தை வழங்கக் கூடிய வகையில் மற்றும் குழுவின் வருமானம் பெறக் கூடிய வகையிலும் நிலையான வைப்புக்களில், முதலீடு செய்யப்படாமல் நிலையத்தின் வங்கி நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்தன் காரணமாக உழைக்கக் கூடியதாக இருந்த வட்டி வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த பணத்தை அதிக நலன்வாய்ந்த முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 465,038 கூட்டுப் பெறுமதி உடைய காசு மீதி ஒன்று இத்தேபாண கமநல சேவைக் குழுவின் மூலம் 02 சேமிப்புக் கணக்குகள் மற்றும் நடைமுறைக் கணக்கில் பேணிச் சென்றிருந்ததுடன் இந்த வங்கி கணக்கு கொடுக்கல் வாங்கல்களுக்காக மீளாய்வாண்டில் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. இந்தப் பணத்தை ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்தும் வரையில் அதிக வட்டி வீதத்தைப் பெறக்கூடிய நிலையான வைப்புக்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பணத்தை நலன் வாய்ந்த அதிக முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த பணத்தை ஆக்கபூர்வமான முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேல் மாகாண விவசாயத் திணைக்களத்தில் இருந்து 2006 ஆம் ஆண்டின் போது 02 குழுக்களுக்காக கிடைக்கப் பெற்ற | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் பயன் படுத்துவதற்கு ஈடுபடுத்தப்படும். | ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கோ அல்லது முறையான |

| | | | |
|---|---|---|---|
| | 02 கை எட்டற்ற கணக்காய்வுத் திகதியான 2024 ஆம் ஆண்டு வரையிலும் செயற்படு நிலையில் காணப்படாதிருந்ததுடன் தேவையான பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு பயன்பாட்டு எடுப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கமநல அபிவிருத்தித் திணைக்களம் மூலம் குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த காப்பகம் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து பயன்பாட்டுக்கு எடுக்கப்படாது இருந்ததுடன் உரிய காப்பகத்தின் பெறுமதி தொடர்பான தகவல்களைப் பெற்று கணக்கீடு செய்வதற்கும் மற்றும் பொருட் பதிவேட்டுப் புத்தகங்களில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திறப்பதற்கு முடியாதிருந்ததுடன் அதற்கான ஆலோசனை பெறப்பட்டுள்ளது. | காப்பகத்தை பயன் படுத்துவதற்கும், பொருட் பதிவேடுகளில் உள்ளடக்குவதற்கும் மற்றும் பெறுமதிகளை கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுப் பெறுமதி ரூபா 1,506,720 செலவில் களனிவில குழுவின் வளவில் இயற்கை உணவகம் என்ற பெயரில் சிற்றுண்டிச் சாலை நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் நீண்ட காலம் முதல் ஆக்கபூர்வமான பணிகளுக்கு பயன்படுத்தப்படாமல் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். 2024 ஆம் ஆண்டு முதல் ஆக்கபூர்வமான பணிகளுக்குப் பயன்படுத்தப்படும். | இந்த சிற்றுண்டிச் சாலை ஆக்கபூர்வமான பணிகளில் பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | பமுணுகம குழு வளவில் நன்னீர் மீன் வளர்ப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட நீர்த் தாங்கி ஆக்கபூர்வமான பணிகளில் பயன்படுத்தப்படாமல் பயனற்றுக் காணப்படுகின்றது. | ஏற்றுக்கொள்கின்றோம். | இந்த நீர்த் தாங்கியை ஆக்கபூர்வமான பணிகளில் பயன்படுத்துதல் வேண்டும். |
| (உ) | பண்டாரகம குழுவிற்கு உரியதாகக் காணப்பட்ட கை உழவு இயந்திரம் 2022, 2023 ஆம் ஆண்டுகளிலும் மற்றும் 2024 யூலை மாதம் வரையும் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | இந்த உழவு இயந்திரத்தை ஆக்கபூர்வமான பணிகளுக்காக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) மதுராவல நிலையத்தில் பசளைக் களஞ்சியம் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் நுழைவு படிக்கட்டுகள் நிர்மாணிக்கப்பட்டமையால் பசளைக் களஞ்சியத்தில் பசளை இருப்பை எடுத்துச் செல்வதற்கு வசதியீனத்தின் காரணமாக பசளைக் களஞ்சியம் பயன்டுத்தப்படாமல் ஏனைய உடைந்த பொருட்கள் களஞ்சியப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டதுடன் 06 வருடங்களுக்கு அண்மித்த காலத்தில் இருந்து குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | இந்த படிக்கட்டுகளினால் பசளை இறக்குவதற்கோ ஏற்றுவதற்கோ வசதியீனமாகக் காணப்பட்டது. கரைசல் பசளைகள் மற்றும் பழைய புத்தகங்கள் காகிதாதிகள் வைக்கப்பட்டுள்ளது. | முறையான பிரகாரம் மாற்றங்களைச் செய்து கட்டிடத்தை திட்டமிடப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 19 குழுக்களுக்கு உரியதாக 548 விவசாய பிரிவுகள் காணப்பட்டதுடன் உரிய பிரிவுகளுக்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 403 ஆனமையால் 140 பிரிவுகளில் பதிற் கடமை உத்தியோகத்தர்களின் கீழ் காணப்பட்டது. | ஊழியர் பற்றாக்குறையின் அடிப்படையில் பதிற் கடமை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பிரிவுகளில் விவசாய மக்களுக்கு சேவையினை செயற்திறனாக வழங்குவதற்காக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 16 செயற்குழுக்களில் 2023 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த திட்டம் மீண்டும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக மற்றும் நிதி சார் செயல் முன்னேற்றம் இலக்குடன் ஒப்பீடு செய்து பரீட்சிக்கக் கூடிய வகையிலும் நிலையத்தின் சகல செயற்பாடுகளையும் உள்ளடக்கிய இலக்கிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்கள் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான செயற்பாடுகளுடன் பரீட்சிக்கக் கூடிய வகையில் அந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்வரும் ஆண்டில் திட்டம் முன்னைய ஆண்டின் போது குறித்துரைத்த திகதியில் தயாரித்து எழுத்து மூல அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் செயல் முன்னேற்றத்தைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**5. கமநல வங்கி**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 17 கமநல வங்கிகளின் மூலம் 296 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த கூட்டுத் தொகையான ரூபா 6,667,282 கடன் மற்றும் வட்டிப் பணம் அறவிடப்படாமையினால் பிணக்குகள் தீர்க்கும் சபைக்கு அனுப்பப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 1,136,015 தொகை மாத்திரம் அறவிடுவதற்கு இயலுமை காணப்பட்டமையால் அத்திகதியில் ரூபா 5,531,267 இனை அறவிடுவதற்கு முடியாமல் காணப்பட்டது. எனினும் நீண்ட காலத்தில் இருந்து அறவிடுவதற்கு முடியாமல் காணப்படுகின்ற இந்த நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த நிலுவைக் கடனை அறவிடுவதற்கு பௌதீக ரீதியில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. | இந்த நிலுவைக் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 20 கமநல சேவைக் குழுக்களில் கமநல வங்கிகள் ஊடான செயற்திட்டம் மூலம் 2023 ஆம் ஆண்டில் கூட்டுமொத்தமாக ரூபா 94,336,050 தொகை 1619 விவசாயிகளுக்கு பல்வேறு கடன் தொகையாக வழங்கப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்வேறு கடன் வகையின் கீழ் 3171 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 121,122,391 கடன் தொகை பெற வேண்டியதாக காணப்பட்டதுடன் அந்த தொகையில் 16 கமநல வங்கிகளில் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 5,594,941 கடன் மீதி காணப்பட்டது. | இந்த பழைய நிலுவைக் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய நிலுவைக் கடனை அறவிடுவதற்கு பௌதீக ரீதியில் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வரையறுக்கப்பட்ட ஹொரண (ஜனத்தா) விவசாய சங்கத்திற்கு 2000 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட விவசாய கம்பனியின் ‘‘நிலுவைக் கடன்’’ தொகையான கூட்டுமொத்தமாக ரூபா 854,900 தொகை 22 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் அந்தக் கடனை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்தப் பழைய கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இந்தப் பழைய நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |